TAMIL NADU LEGISLATURE
6 NOV 1972
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1972 ஆகஸ்ட் 18.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. **பெ. சீனிவாசன்** அவர்கள் தலைமையில் **பேரவை கூடியது.**

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

State Planning Commission

* 146 *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon the Chief Minister be pleased to state—

(*a*) whether the State Planning Commission has submitted its interim report; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த மாநிலத் திட்ட ஆணைக் குழு அமைக்கப்பட்டு, ஓராண்டுக்கு மேலாகிவிட்டதே. அந்தத் திட்ட ஆணை குழுவில் இரண்டு உறுப்பினர்கள் இப்பொழுது இல்லையே. அவர்களுக்கு மாற்றாக வேறு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? அவர்கள் இடைக்கால ரிப்போர்ட் ஏதாவது அளித்திருக்கிறார்களா? குறிப்பாக, தமிழகத்தில் பிரத்தியேகமாக இருக்கக்கூடிய கைத்தறி போன்றவற்றைப் பற்றியாவது ரிப்போர்ட் கொடுக்கும்படியாகத் தாக்கீது அனுப்பப் படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ் நாட்டினுடைய நீண்ட காலத் திட்டத்தைக் குறித்து முன்வரைவு (ட்ராஃப்ட் அவுட்லைன்) ஒன்றைத் திட்ட ஆணைக்குழு தயாரித்து வருகிறது. அதனுடைய வேலை முடியும் தருவாயிலிருக்கிறது. அதனுடைய

[1972 ஆகஸ்ட் 18

முன்வரைவு மிக விரைவில் சட்டப் பேரவையில் வைக்கப்படும். இரண்டு உறுப்பினர்கள் இதில் இல்லை என்று சொல்வது சரியான தகவல் அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இத் திட்டக் கமிஷன் மாவட்ட வாரியாக ஆய்வுகள் நடத்தி அது சம்பந்தமாக இடைக்காலப் பரிந்துரைகள் ஏதாவது வந்திருக்கிறதா? அப்படியென்றால், அதன் விவரங்களை முதலமைச்சரவர்கள் தருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாவட்டங்களில் முனைப்பான தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வுகள் நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாக, தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் முனைப்பான தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொண்டு, பின்னர் அவற்றைப் பிற மாவட்டங்களுக்கு நீட்டிப்பது இந்தக் குழுவினுடைய நோக்கமாகும். அதன் தொடர்பாக, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்தியத் தொழில் கடன் முதலீட்டுக் கழகம் போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் இந்த ஆணைக்குழு சந்தித்து இருக்கிறது. தொழில் நுட்ப உதவியை அவர்கள் அளிப்பார்கள் என்று அறியப் பட்டுள்ளது. இதுதவிர, இந்நாட்டில் சிறந்து விளங்கும் ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து தொழில் நுட்ப உதவியைப் பெறுவதற்கான வாய்ப்புகள் பற்றியும் இந்த ஆணைக்குழு ஆய்வு செய்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : திட்ட ஆணைக்குழுவின் 'ட்ராஃப்ட் வரைவு' தயாராயிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியானால் அந்த ட்ராஃப்ட் அவை முன் ஒரு மாத காலத்திற்குள் அவைமுன் சமர்ப்பிக்கப்படுமா? "ஃபார்ம் டேட்" கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 'விரைவில்' என்று நான் சொன்னேன். 'ஒரு மாதத்திற்குள்ளாக' என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதற்குள்ளாகக்கூட அது அளிக்கப் படும் என்று கருதுகிறேன்.

திரு. நா. வீராசாமி : இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் இப்படிப்பட்ட மாநில திட்ட ஆணைக்குழு அமைக்கப்பட்டிருப்பது குறித்து மத்திய அரசு கருத்து தெரிவித்திருக்கிறதா ? அப்படி யென்றால் என்ன கருத்தைத் தெரிவித்தது ?

1972 ஆகஸ்டு 18]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மத்திய அரசு, தமிழ் நாட்டில் மாநிலத் திட்டக்குழு அமைப்பதை வரவேற்றிருக்கிறது. மத்திய அரசின் திட்ட அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்களே அதை வரவேற்றுப் பேசியிருக்கிறார். அது மாத்திரமல்லாமல், அவர்கள் திட்டக் குழுவின் தலைவராக இருந்த காலத்தில் இந்த மாநிலத் திட்ட ஆணைக்குழு செயல் படுவதைப் பற்றி அவர்கள் ஆராய்ந்து பார்த்து. மத்திய திட்ட ஆணைக்குழுவைச் சேர்ந்த நீண்ட கால திட்டப் பிரிவு இயக்குநர் அவர்களைச் சென்னைக்கு அனுப்பியிருந்தார். அவர் மாநில திட்ட ஆணைக்குழுவோடு விவாதித்தார்.

* 147 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Planning Commission has evolved any plan to reduce the unemployment problem in this State; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) மாநிலத் திட்ட ஆணைக்குழு குறிக்கோள்கள் பலவற்றை எய்தும் திட்டம் ஒன்றை வகுப்பதில் ஈடுபட்டுள்ளது. அவற்றில் ஒன்று இம் மாநிலத்தில் வேலை வாய்ப்பின்மைப் பிரச்சினையைக் குறைப்பதாகும்.

திரு. என். கே. பழனிசாமி: வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு எவ்வளவு செலவாகும், அதில் மத்திய சர்க்காருடைய பங்கு என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைகளையெல்லாம் இப்பொழுது திட்ட ஆணைக்குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆராய்ந்து முடிவாகத் தெரிவித்ததற்குப் பிறகு, மத்திய அரசாங்கத்தினுடைய பங்கு பற்றி நாம் யோசிக்க முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு மத்திய அரசு சில சிறப்புத் திட்டங்களை அமைத்திருக்கிறது. அதே மாதிரி நமது மாநில அரசும் ஏதாவது சிறப்புத் திட்டம் தீட்டுவதற்கு உத்தேசித்திருக்கிறதா?